**அனுப்புநர்**

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண். 012923/எச்1/2021** **நாள் : 22.07.2021**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு 2021 – தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல் தொடர்பான செய்திக்குறிப்பு மற்றும் துணைத் தேர்வுக் கால அட்டவணை – வெளியிட வேண்டுதல் – தொடர்பாக.

-----

2020–2021–ஆம் கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களுக்கு 19.07.2021 அன்று வெளியிடப்பட்ட தேர்வு முடிவுகளில் பெற்ற மதிப்பெண் குறைவாக உள்ளதாகக் கருதும் மாணவர்களிடமிருந்தும், மே 2021 மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வெழுத விண்ணப்பிக்கத் தவறிய தகுதியுள்ள தனித்தேர்வர்களிடமிருந்தும், 2021 மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) துணைத் தேர்வுக்கு இணைய தளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

2021 மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Government Examinations Service Centres) நேரில் சென்று ஆன்–லைனில் விண்ணப்பித்தல் தொடர்பான செய்திக்குறிப்பு மற்றும் 2021 மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுக் கால அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பு மற்றும் தேர்வுக் கால அட்டவணையினை தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வண்ணம் தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடுமாறும் ஒளி /ஒலி பரப்பிடுமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**'இது விளம்பரம் அல்ல'** எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இணைப்பு :** செய்திக்குறிப்பு மற்றும் தேர்வுக் கால அட்டவணை.

ஒம்/–
**இயக்குநர்**

<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை 600 006</u>
<u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு 2021</u>
<u>தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்</u>

<u>செய்திக் குறிப்பு</u>

**2020–2021–**ஆம் கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களுக்கு **19.07.2021** அன்று தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டது. அரசாணை (நிலை) எண். 105, பள்ளிக் கல்வி (அ.தே) துறை, நாள்.12.07.2021 –ல், இத்தேர்வு முடிவுகளில் மதிப்பெண் குறைவாக உள்ளதாகக் கருதும் மாணவர்களுக்கு அவர்கள் விரும்பினால் பன்னிரெண்டாம் வகுப்பு எழுத்துத் தேர்வெழுத வாய்ப்பு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அரசாணையின் அடிப்படையில், **2020–2021–**ஆம் கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களுக்கு **19.07.2021** அன்று வெளியிடப்பட்ட தேர்வு முடிவுகளில் பெற்ற மதிப்பெண் குறைவாக உள்ளதாகக் கருதும் மாணவர்கள், **23.07.2021 முதல் 27.07.2021 வரையிலான நாட்களில் (25.07.2021 ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக) காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணிக்குள்** கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்கள் (Service centres) வாயிலாக **2021** மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வினை எழுத விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும்போது, மாணவர்கள் கட்டாயம் தங்களுக்குரிய அனைத்துப் பாடத்தேர்வுகளையும் எழுதுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும். அத்தேர்வர்கள் குறிப்பிட்ட பாடத்தேர்வுகளை மட்டும் எழுதுவதற்கு விண்ணப்பிக்க இயலாது. மேலும், தற்போது எழுதவுள்ள தேர்வில் பெறப்படும் மதிப்பெண்களே இறுதியானது.

**மே 2021 மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வெழுத விண்ணப்பிக்கத் தவறிய தனித்தேர்வர்களும் மேற்குறிப்பிட்ட நாட்களில் 2021 மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வெழுத சேவை மையங்கள் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.**

மே 2021 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத விண்ணப்பித்த தனித்தேர்வர்கள், 2021 மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வினை எழுத தற்போது மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

<u>சிறப்பு அனுமதித் (தக்கல்) திட்டம்</u>

**23.07.2021** முதல் **27.07.2021** வரையிலான தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் (தக்கல்) திட்டத்தில் **28.07.2021** அன்று ஆன்–லைனில் சேவை மையங்கள் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். **(சிறப்பு அனுமதிக் கட்டணம் – ரூ.1000/–)**

<u>அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள்</u>

**கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்களின் (Government Examinations Service Centres) விவரங்கள் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பங்களை பதிவு செய்யும் தனித்தேர்வர்களுக்கான தகுதி மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம்.** மேலும், இவ்விவரங்களை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

<u>தேர்வுக்கால அட்டவணை</u>

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தேர்வுக் கால அட்டவணையின்படி, **2021** மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு நடைபெறும்.

<u>பொதுவான அறிவுரைகள்:-</u>

- **தேர்வர்கள் 2021 துணைத் தேர்வெழுதுவதற்கு விண்ணப்பிக்க சேவை மையங்களுக்கு வரும் பொழுது கட்டாயம் முகக்கவசம் அணிந்து வரவேண்டும்.**
- **போதிய சமூக இடைவெளி கடைபிடிக்க வேண்டும்.**

ஒம்/–

**இயக்குநர்**

**இடம்: சென்னை–6**
நாள் :**22.07.2021**

## DIRECTORATE OF GOVERNMENT EXAMINATIONS, CHENNAI – 600 006

## HIGHER SECONDARY SECOND YEAR (+2) SUPPLEMENTARY EXAMINATION AUGUST -2021

## TIME TABLE

## Examinations Commence at 10.00 a.m. ends at 01.15 p.m

| | |
|---|---|
| 10.00 a.m. To 10.10 a.m | Reading the question paper |
| 10.10 a.m to 10.15 a.m | Verification of Particulars by the Candidates |
| 10.15 a.m to 1.15 p.m | Duration of the Examination |

| DATE | DAY | SUBJECT | |
|---|---|---|---|
| 06.08.2021 | FRIDAY | Part -I | LANGUAGE |
| 09.08.2021 | MONDAY | Part -II | ENGLISH |
| 11.08.2021 | WEDNESDAY | Part -III | PHYSICS<br>ECONOMICS<br>COMPUTER TECHNOLOGY |
| 13.08.2021 | FRIDAY | Part -III | CHEMISTRY<br>ACCOUNTANCY<br>GEOGRAPHY |
| 16.08.2021 | MONDAY | Part -III | MATHEMATICS<br>ZOOLOGY<br>COMMERCE<br>MICRO BIOLOGY<br>NUTRITION AND DIETETICS<br>TEXTILE & DRESS DESIGNING<br>FOOD SERVICE MANAGEMENT<br>AGRICULTURAL SCIENCE<br>NURSING (GENERAL)<br>NURSING VOCATIONAL |
| 18.08.2021 | WEDNESDAY | Part -III | BIOLOGY<br>BOTANY<br>HISTORY<br>BUSINESS MATHEMATICS AND STATISTICS<br>BASIC ELECTRICAL ENGINEERING<br>BASIC ELECTRONICS ENGINEERING<br>BASIC CIVIL ENGINEERING<br>BASIC AUTOMOBILE ENGINEERING<br>BASIC MECHANICAL ENGINEERING<br>TEXTILE TECHNOLOGY<br>OFFICE MANAGEMENT AND SECRETARYSHIP |
| 19.08.2021 | THURSDAY | Part -III | COMMUNICATIVE ENGLISH<br>ETHICS AND INDIAN CULTURE<br>COMPUTER SCIENCE<br>COMPUTER APPLICATIONS<br>BIO-CHEMISTRY<br>ADVANCED LANGUAGE(TAMIL)<br>HOME SCIENCE<br>POLITICAL SCIENCE<br>STATISTICS |

**Place: Chennai -6**
**Date: 22.07.2021**

Sd/-
Director